




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 220 02.2.2026 MONDAY THAI : 19 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 220 02.2.2026 திங்கள்கிழமை தை : 19 விலை : ரூ.5/–


## ‘‘குறிக்கோள்களுடன் கூடிய இந்த பட்ஜெட்

# ‘‘நாட்டின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும்!’’

## ‘‘இந்தியாவின் உண்மையான நெருக்கடிகள் மீது கவனம் செலுத்தாத பட்ஜெட்’’ ராகுல் காந்தி



புது டெல்லி. பிப்.2.-

‘இந்தியாவின் உண்மையான நெருக்கடிகள் குறித்து பார்வையற்ற, திருத்தங்களைச் செய்ய மறுக்கும் ஒரு பட்ஜெட் இது’ என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார்.

மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். இதுகுறித்து ராகுல் காந்தி எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், ‘வேலையில்லாத இளைஞர்கள், சரிந்து வரும் உற்பத்தி, முதலீட்டை திரும்பப் பெறும் முதலீட்டாளர்கள், அதலபாதாளத்தில் விழும் குடும்ப சேமிப்புகள், துயரத்தில் உள்ள விவசாயிகள், வரவிருக்கும் உலகளாவிய அதிர்ச்சிகள் ஆகிய அனைத்தும் இந்த பட்ஜெட்டில் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் உண்மையான நெருக்கடிகள் குறித்து பார்வையற்ற, திருத்தங்களைச் செய்ய மறுக்கும் ஒரு பட்ஜெட் இது’’ என்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் கடினமான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சவால்களை எதிர்கொள்வதற்கான தொலைநோக்குப் பார்வை இந்த பட்ஜெட்டில் இல்லை என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘மோடி அரசாங்கத்திடம் யோசனைகள் தீர்ந்துவிட்டது. நமது விவசாயிகள் நலத்திட்டங்களுக்காக காத்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் காணப்பட்டதை விட ஏற்றத்தாழ்வு அதிகரித்துவிட்டது, ஆனால் பட்ஜெட் அதைப் பற்றிக் குறிப்பிடக்கூட இல்லை. எஸ்சி, எஸ்டி, ஓபிசி, இடபிள்யூஎஸ் மற்றும் சிறுபான்மை சமூகங்களுக்கு இந்த பட்ஜெட்டில் எந்த ஆதரவும் வழங்கப்படவில்லை.

நாட்டின் உற்பத்தியில் மறுமலர்ச்சி இல்லை. நமது இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்கான தீவிர திட்டம் இல்லை. ஏற்றுமதி சரிவை சந்தித்துள்ளது. சரிந்து வரும் ரூபாய் மதிப்பை சரிசெய்ய எந்த திட்டமும் இல்லை. ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்துக்கான பணவீக்கத்துக்கு நிவாரணம் இல்லை. நாட்டின் சேமிப்பு வீழ்ந்து, கடன் உயர்ந்துள்ளது குறித்து எந்த திட்டமும் இல்லை.

உள்கட்டமைப்பு வாக்குறுதிகள் மீண்டும் மீண்டும் கொடுக்கப்படுகிறது. நமக்கு எப்போது "ஸ்மார்ட் சிட்டிகள்" அல்லது வாழக்கூடிய நகரங்கள் கிடைக்கும். சமூகப் பாதுகாப்பு குறித்து ஒரு குறிப்பிடத்தக்க அறிவிப்பு கூட இல்லை. பட்ஜெட் இதற்கு எந்த தீர்வுகளையும் வழங்கவில்லை’ என்று கார்கே கூறினார்.

புதுடெல்லி: பிப்.2-

2047ம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய நமது பயணத்திற்கு இந்த பட்ஜெட் ஒரு அடித்தளம் என்று தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, இது நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலம் மத்திய பட்ஜெட் 2026 குறித்த தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். இதில் பேசிய பிரதமர், ‘‘இந்த பட்ஜெட் வரலாற்றுச் சிறப்புமிக்கது. பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கத்தில் செயல்படும் தேசத்தின் உணர்வைப் பிரதிபலிக்கிறது. மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், ஒரு பெண் நிதி அமைச்சராக, தொடர்ந்து ஒன்பதாவது முறையாக நாட்டின் பட்ஜெட்டைத் தாக்கல் செய்து ஒரு புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார். இந்தப் பட்ஜெட் மகத்தான வாய்ப்புகளைக் கொண்டது. இது நிகழ்காலத்தின் கனவுகளை நிறைவேற்றி, இந்தியாவின் பொன்னான எதிர்காலத்திற்கான அடித்தளத்தை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது. 2047ம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதற்கான ஒரு வலுவான அடித்தளமாக இந்த பட்ஜெட் அமைந்துள்ளது.

இந்தியாவில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள், இந்தப் பட்ஜெட் மூலம் புதிய ஆற்றலையும் புதிய உத்வேகத்தையும் பெறும். ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட முக்கிய சீர்திருத்தங்கள், லட்சியம் நிறைந்த, திறமையான இளைஞர்களுக்குப் பெரிய வாய்ப்புகளை வழங்கியுள்ளன. இந்த பட்ஜெட் நம்பிக்கை அடிப்படையிலான நிர்வாகம், மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரக் கட்டமைப்பு ஆகிய தொலைநோக்குப் பார்வைகளை உணர்த்துகிறது. நிதிப் பற்றாக்குறையைக் குறைத்தல், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றுடன், அதிக மூலதனச் செலவினத்துடன் உயர் வளர்ச்சியை உறுதி செய்வதில் கவனம் செலுத்தக்கூடிய ஒரு தனித்துவமான பட்ஜெட் இது.

இந்த பட்ஜெட் உலக அளவில் இந்தியாவின் பங்கை மேலும் வலுப்படுத்தும். வேகமாக வளர்ந்து



வரும் பொருளாதாரமாக மட்டும் இருப்பதில் இந்தியா திருப்தி அடையவில்லை. விரைவில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறுவதை நோக்கி உறுதியாகப் பயணித்து வருகிறது. இது கோடிக்கணக்கான இந்தியர்களின் கூட்டுத் தீர்மானம். ஒரு நம்பகமான ஜனநாயக நாடாகவும், தரமான பொருட்களை விநியோகிக்கும் நாடாகவும் இந்தியாவின் பங்கு தொடர்ச்சியாக வலுவடைந்து வருகிறது. இந்தியா அண்மையில் மேற்கொண்டுள்ள முக்கிய வர்த்தக ஒப்பந்தங்கள், நாட்டின் இளைஞர்களுக்கும் சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கும் அதிகபட்ச பலன்களை உறுதி செய்யும். அதன் ஒரு பகுதியாக இந்தப் பட்ஜெட்டில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் தயாரிப்போம், தற்சார்பு இந்தியா போன்ற முன்முயற்சிகளை விரைவுபடுத்துவதற்கான ஒரு லட்சிய செயல் திட்டத்தை இந்த பட்ஜெட் முன்வைத்துள்ளது. பயோஃபார்மா சக்தி திட்டம், இரண்டாம் கட்ட செமிகண்டக்டர் இயக்கம், மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தித் திட்டம், அரிய வகை கனிமங்களுக்கான வழித்தடம் உருவாக்குதல், முக்கிய கனிமங்கள் துறையை வலுப்படுத்துதல், ஜவுளித் துறையில் புதிய திட்டங்கள், உயர் தொழில்நுட்பக் கருவிகள் உற்பத்தியை ஊக்குவித்தல், முன்னணி குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களை மேம்படுத்துதல் போன்ற அம்சங்கள் அந்தந்தத் துறைகளுக்கு முன் எப்போதும் இல்லாத ஆதரவை வழங்கும். இது தொலைநோக்குப் பார்வை கொண்ட பட்ஜெட். இது தேசத்தின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகள் இரண்டையும் பூர்த்தி செய்யும். குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றுக்கு வழங்கப்படும் ஆதரவு, அவற்றை உள்ளூர் நிலையிலிருந்து உலகளாவிய நிலைக்கு வளரச் செய்யும்.

மேலும், பிரத்யேக சரக்கு வழித்தடம், நாடு முழுவதும் நீர்வழிகளை விரிவுபடுத்துதல், அதிவேக ரயில் வழித்தடம், இரண்டாம் மூன்றாம் நிலை நகரங்களின் மேம்பாட்டில் சிறப்பு கவனம் செலுத்துதல், நகராட்சி நிர்வாகங்களுக்கு வலுவான பொருளாதார அடித்தளங்களை வழங்க நகராட்சிப் பத்திரங்களை ஊக்குவித்தல் உள்ளிட்ட பல முக்கிய நடவடிக்கைகள் இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய பயணத்தை விரைவுபடுத்தும்.

எந்தவொரு தேசத்தின் மிகப்பெரிய மூலதனமும் அதன் மக்கள்தான். கடந்த சில ஆண்டுகளில் மக்களின் திறன்களை மேம்படுத்த அரசு பெரிய முதலீடுகளைச் செய்துள்ளது. திறன்களையும் நிலைத்தன்மையையும் வலுப்படுத்துவதே தொடர்ச்சியான முயற்சியாக இருந்து வருகிறது. இது இளைஞர் சக்திக்கு ஊக்கமளிக்கும் பட்ஜெட். இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்கள், பல துறைகளில் இளம் கண்டுபிடிப்பாளர்களையும் படைப்பாளிகளையும் உருவாக்கும்.

கூடுதல் மருத்துவ மையங்களை நிறுவுதல், துணை சுகாதார வல்லுநர்களை அதிகரித்தல், ஒலிஒளி ஊடகங்கள் அடங்கிய படைப்பாற்றல் பொருளாதாரத்தை ஊக்குவித்தல், கேலோ இந்தியா இயக்கம் ஆகியவை மூலம் இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் உருவாக்கப்படும். இந்தியாவை உலகின் தரவு மையமாக மாற்றுவதற்காக பெரிய வரிச் சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்ஜெட் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு சிறந்த ஊக்கத்தை அளிக்கும். குறிப்பாக வடகிழக்கு மாநிலங்களில் சுற்றுலாவை மேம்படுத்த உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதும், மாநிலங்களின் சீரான வளர்ச்சிக்கான அடித்தளம் வலுப்படுத்தப்பட்டிருப்பதும் மகிழ்ச்சி அளிக்கிறது.

பத்து கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் சுயஉதவிக் குழுக்களுடன் இணைந்துள்ளனர். ஒவ்வொரு வீட்டிலும் செழிப்பு அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், பெண்களால் வழிநடத்தப்படும் சுயஉதவிக் குழுக்களுக்கு நவீன சூழலை உருவாக்குவதற்கு இந்தப் பட்ஜெட் முன்னுரிமை அளிக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாணவியருக்காகப் புதிய விடுதிகளைக் கட்டும் திட்டத்தால், பெண் கல்வி அதிகரிக்கும்.

விவசாயம், பால்வளம், மீன்வளம் ஆகியவற்றுக்கு அரசு எப்போதும் அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. இந்தப் பட்ஜெட்டில், தென்னை, முந்திரி, கோகோ போன்றவற்றை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்காக முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பாரத் விஸ்தார் செயற்கை நுண்ணறிவு தளம், விவசாயிகளுக்கு அவர்களின் சொந்த மொழியில் தகவல்களை வழங்கும். இதன் மூலம் விவசாயிகள் பெரிதும் பயன் அடைவார்கள்.

மீன்வளத்துறையிலும் கால்நடை வளர்ப்பிலும் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதன் மூலம் கிராமங்களில் அதிக வேலைவாய்ப்புகளையும் சுயதொழில் வாய்ப்புகளையும் உருவாக்க முடியும். இந்த பட்ஜெட் தொலைநோக்குப் பார்வையுடையது. தேசத்தின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதாக உள்ளது. எதிர்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, கிராமங்கள், ஏழைகள், விவசாயிகள் ஆகியோரின் நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பட்ஜெட்டை வழங்கியதற்காக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனுக்கும் அவரது குழுவினருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்’’ என தெரிவித்துள்ளார்.

## பழநி தைப்பூசத் திருவிழாவில் கூட்ட நெரிசலில் சிக்கி மயங்கி விழுந்த பக்தர்கள்



திண்டுக்கல்: பிப்.2-

பழநி தைப்பூசத் திருவிழாவில் பக்தர்கள் பலர் கூட்ட நெரிசலில் சிக்கி மயங்கி விழுந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழநி பெரியநாயகியம்மன் கோயிலில் தைப்பூசத் திருவிழா ஜன.26ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் முக்கிய நிகழ்வான தைப்பூசத் தேரோட்டம் மாலை 4 மணிக்கு மேல் நடைபெற்றது.

தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு, பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளான பக்தர்கள் திரண்டனர். அவர்கள், நேற்று அதிகாலை 2 மணி முதல் பழநி மலைக்கோயிலுக்கு செல்லும் வரிசையில் குவியத் தொடங்கினர். நேரம் செல்ல செல்ல பக்தர்களின் வருகை தொடர்ந்து அதகரித்தபடியே இருந்தது. கூட்டத்தை சமாளிக்க முடியாமல் போலீஸார், அறநிலையத்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் திணறினர்.

கூட்டம் அதிகளவில் இருந்ததால் மலைக்கோயிலுக்கு செல்லும் பாதை ஒருவழியாக மாற்றப்பட்டது. மலைக்கோயிலுக்கு செல்லும் பக்தர்கள் குடமுழுக்கு நினைவரங்கம் வழியாகவும், கீழே இறங்கும் பக்தர்கள் படிப்பாதை வழியாகவும் அனுமதிக்கப்பட்டனர். மலைப்பாதையில் பக்தர்களை போலீஸார் அணி அணியாக பிரித்து அனுப்பினர்.

இருப்பினும், பக்தர்கள் ஒருவருக்கு ஒருவர் முந்திச் செல்ல முயன்றதால் கடும் நெரிசல் ஏற்பட்டது. இதன் காரணமாகவும், நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்ததாலும் பக்தர்கள் பலர் மயங்கி விழுந்தனர். அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸார், மயங்கி விழுந்தவர்களை மீட்டு தோளில் சுமந்தபடி மருத்துவ முகாமிற்கு அழைத்து சென்று முதலுதவி அளித்தனர். தரிசனத்துக்காக பல மணி நேரம் வரிசையில் காத்திருக்க நேரிட்டதால், போதிய குடிநீர், கழிப்பறை வசதி இல்லாமல் பக்தர்கள் பலர் சிரமத்துக்கு உள்ளாகினர்.

## தேர்தல் பிரச்சார சட்டப் பாதுகாப்புக் குழு அறிவித்தார் : விஜய்



சென்னை, பிப்.2-

பிரச்சார அனுமதி பெறுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக தவெகவில் தேர்தல் பிரச்சார சட்டப்பாதுகாப்புக் குழுவை அக்கட்சியின் தலைவர் விஜய் நியமித்துள்ளார்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் பிரச்சாரங்களை ஒருங்கிணைக்கவும் மற்றும் சட்ட ரீதியான பாதுகாப்பை உறுதி செய்யவும் பல்வேறு முக்கிய குழுக்களை தவெக நியமித்துள்ளது. அந்தவகையில், தற்போது தேர்தல் பிரச்சாரத்தின் போது காவல்துறையிடம் அனுமதி பெறுவது மற்றும் சட்டப் போராட்டங்களை முன்னெடுப்பதற்காக, அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர்களை கொண்டு, சட்டப்பேரவை தேர்தல் பிரச்சார மாநில பாதுகாப்பு குழு ஒன்றை விஜய் நியமித்துள்ளார்.

அந்தக் குழுவில், கட்சியின் இணை பொதுச் செயலாளர் சி.டி.ஆர். நிர்மல் குமார், பொருளாளர் வெங்கட்ராமன், வழக்கறிஞர் பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர் அறிவழகன், சட்ட ஆலோசனைப் பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர் குமரேசன், இணை ஒருங்கிணைப்பாளர்கள் சிவசண்முகம், பாண்டியன், வழக்கறிஞர் பிரிவு இணை ஒருங்கிணைப்பாளர்கள் இந்திரா தன்ராஜ், சக்கரவர்த்தி, தேசிய செய்தி தொடர்பாளர் சத்யகுமார் உள்ளிட்ட 25 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழுவினர், கட்சியின் தேர்தல் களப்பணிகள் எந்தவித சட்டச் சிக்கல்களும் இன்றி சுமுகமாக நடைபெறுவதை உறுதி செய்யும் ஒரு முக்கியமான அரணாகச் செயல்படும். மேலும், தேர்தல் நடத்தை விதிமுறைகளை கண்காணித்தல், பிரச்சார அனுமதிகளை பெறுதல், பொய் வழக்குகள் மற்றும் சட்ட நெருக்கடிகளைத் தடுத்தல், வேட்பு மனுத் தாக்கல் மற்றும் சரிபார்த்தல், மாவட்ட அளவிலான வழக்கறிஞர் அணிகளை ஒருங்கிணைத்தல், சமூக ஊடகக் கண்காணிப்பு உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள இருக்கின்றனர்.



■ எஸ்.வி. புரம் கொழுமம் ரோட்டில் 15 ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிகரமாக இயங்கி வரும் மக்கள் ஆதரவு பெற்ற பழனியப்பா ஐயங்கார் பேக்கரி திறப்பு விழா பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினரும் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் அவர்கள் ஆசியுடன் உடுமலை நகர கழக செயலாளர் வேலுச்சாமி உடுமலை நகர மன்ற தலைவர் மத்தின், இரண்டாவது வார்டு நகர மன்ற உறுப்பினர் ராஜலட்சுமி, 29 ஆவது வார்டு நகர மன்ற உறுப்பினர் காளையன், வக்கீல் வெங்கடாசலம், செல்வராஜ் ,28 வது வார்டு செயலாளர் விக்னேஷ், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் நண்பர்கள் பொதுமக்கள் பழனியப்பா பேக்கரி கடை திறப்பு விழாவில் கலந்து கொண்டார்கள். பேக்கரி உரிமையாளர் ஏ முருகேசன் அனைவரையும் வரவேற்றார்.



■ திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் நடைபெற்ற தைப்பூச விழாவில் இந்து முன்னணி சார்பாக மகளீரால் 1008 பால்குடங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. இதில் நாயுடுபுரம், அண்ணாநகர் மூஞ்சிக்கல், செல்லபுரம், புதுக்காடு ஆகிய பகுதிகளில் இருந்து பால்குடமானது ஒன்றாக இணைக்கப்பட்டு அருள்மிகு குறிஞ்சி ஆண்டவர் திருக்கோவிலுக்கு உச்சிக்கால பூஜைக்காக கொண்டு செல்லப்பட்டு முருகனின் திருமேனி புனித நீரால் பூஜை செய்யப்பட்டது. இதில் இந்து முன்னணி நிர்வாகிகள், பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த நிர்வாகிகள், இந்து அமைப்புகள் இந்து சமுதாயத்தை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். வருடம் தோறும் தைப்பூசத் திருநாளில் இந்து முன்னணி சார்பாக இவ்விழா சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.



■ திருநெல்வேலி மாவட்டத்தில் புகழ்பெற்ற உவரி ஸ்ரீ சுயம்புலிங்க சுவாமி திருக்கோவிலில் தைப்பூச தேரோட்ட விழா சிறப்பாக நடைபெற்றது.





# ஸ்ரீ வெற்றிவேலாயுத சாமி திருக்கோயிலில் தைப்பூசத்தை முன்னிட்டு தேரோட்டம்

திருப்பூர், பிப்.2.-

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி, கைத்தமலை ஸ்ரீ வெற்றிவேலாயுதசாமி திருக்கோயில் தைப்பூசத் தேரோட்ட திருவிழா கடந்த 24ம் தேதி கைத்தமலையில் கொடியேற்றத்துடன் துவங்கியது. அதனைத் தொடர்ந்து ஊத்துக்குளியில் 4 ரத வீதிகளின் வழியாக காலை, மாலை ஆகிய நேரங்களில் முருகன் ,வள்ளி, தெய்வானை சமேதமாக சுவாமி திருவீதி உலா நிகழ்ச்சியும், மயில்வாகன காட்சியும் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் பங்கேற்று வெற்றி வேலாயுத சுவாமியை தரிசனம் செய்து அரோகரா கோஷத்தோடு தேரை வடம் பிடித்து இழுத்தனர்.தேருக்கும் முன்பாக சிறுவர்கள் பெண்கள் என அனைவரும் உற்சாக நடனம் ஆடினர்.

தொடர்ந்து வரும் 4ம் தேதி தேர் திருவிழாவின் முக்கிய நிகழ்வான கதித்தமலை ஆண்டவருக்கு மகா அபிஷேகம், மகா தீபாராதனை அதனை தொடர்ந்து 10 மணி அளவில் ஸ்ரீகதித்தமலை ஆண்டவர் சுவாமி ரத ஆரோகணம், மலைத்தேர் வடம் பிடித்தல் ஆகியவை நடைபெறவுள்ளது.

தேரோட்டத்துக்கு முன்பாக பெருந்துறை எம்எல்ஏ ஜெயக்குமார் ஜமாத் இசைத்தும் ஜமாப் இசைக்கு நடனமும் ஆடினார். அதேபோல தேர் வடம் பிடித்து இழுத்து வரும் பொழுது ஊத்துக்குளி காவல் நிலையம் சார்பாக காவலர்கள் பக்தர்களுக்கு பிஸ்கட் வழங்கினர்.

# கிராம தங்கல்' திட்டத்தின் கீழ் அலங்காநல்லூரில் தேங்காய் மட்டையை பயன்படுத்தி வயலில் பறவை குடில் அமைத்தல்



உசிலம்பட்டி, பிப்.2.-

உசிலம்பட்டி கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி இளநிலை இறுதி ஆண்டு மாணவர்கள் 'கிராம தங்கல்' திட்டத்தின் கீழ் அலங்காநல்லூர் ஒன்றியத்தில் முகாமிட்டு, மதுரை மாவட்டம் செம்புகுடிப்பட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு நெல் வயல்களில் பயிர்களை பாதுகாக்கவும், இயற்கை முறையில் பூச்சி கட்டுப்பாட்டை மேம்படுத்தவும் தேங்காய் மட்டையை பயன்படுத்தி பறவை குடில்கள் அமைக்கப்படுகின்றன.

வயலின் ஓரங்களில் அல்லது நடுப்பகுதியில் உறுதியான கம்பங்களை நட்டு, அதன் மேல் தேங்காய் மட்டைகளை கொண்டு சிறிய குடில் அல்லது அமர்விடமாக அமைத்தால், பறவைகள் எளிதில் வந்து தங்கும் வகையில் சூழல் உருவாகிறது. இவ்வாறு அமைக்கப்படும் பறவை குடில்களில் தங்கும் பறவைகள், நெல் பயிர்களை சேதப்படுத்தும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை உண்டு அழிப்பதால், ரசாயன பூச்சிக்கொல்லி பயன்பாடு குறைகிறது. மேலும், தேங்காய் மட்டை எளிதில் கிடைக்கக்கூடிய இயற்கை வளமாக இருப்பதால் குறைந்த செலவில் குடில் அமைக்க முடியும். இந்த முறையால் சுற்றுச்சூழல் பாதுகாப்புடன், நெல் விளைச்சல் அதிகரித்து, விவசாயிகளின் செலவும் குறைகிறது.

இந்த விளக்கத்தை மாணவர்கள் கார்த்திகேயன், ஜெய் பிரகாஷ், சக்திவேல், யுவராஜா, சருண் குமார், விஷ்ணு, தரணிதரன் வழங்கினர்; வேளாண் உதவி அலுவலர்கள் உடனிருந்தனர்.



# திருப்பூர் ஊத்துக்குளி ஸ்ரீவெற்றி வேலாயுத சாமி தைப்பூச தேரோட்டம்

திருப்பூர்., பிப்.2.-

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி ஸ்ரீ வெற்றி வேலாயுத சாமி திருக்கோவில் தைப்பூச தேர்த்திருவிழா முன்னிட்டு, திமுக ஈரோடு மத்திய மாவட்ட செயலாளர் கொடிவேரி நாயகன் முன்னால் அமைச்சர் தோப்பு என்.டி வெங்கடாசலம் கலந்துகொண்டு தேரினை வடம் பிடித்து இழுத்து துவங்கி வைத்தார். மேலும் நீர் மோர் பந்தல் அன்னதானம் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பொது மக்களுக்கு நீர்மோர் மற்றும் உணவுகளை வழங்கினார். ஊத்துக்குளி திமுக ஒன்றிய செயலாளர் பிரபு பேரூர் கழக செயலாளர் திருமூர்த்தி. மற்றும் பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் காஞ்சனா ஈஸ்வரன், தனம் சுப்பிரமணி, பேபி திருமூர்த்தி, மெடிக்கல் கணேஷ்,

வேல்முருகன், திமுக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



■ நடிகை கோவை மல்லிகா நடிகர் சரத்குமார் அவர்களை சந்தித்து பூங்கொத்து கொடுத்து வாழ்த்து பெற்றார். ராகவி சினி ஆர்ட்ஸ் சார்பிலும், நீலாவதி டிரஸ்ட் சார்பிலும் திரைப்பட இயக்குனரும், நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினரும், சமூக சேவகருமான சேவா ரத்னா டாக்டர் ஜெ.விக்டர், நடிகர் மீசை மனோகரன், நடிகர் அப்பா பாலாஜி, எழுத்தாளர் விவேக் ராஜ், மேக்கப் ஆர்ட்டிஸ்டும், நடிகையுமான அங்கிதா, குழந்தை நட்சத்திரம் லியானா மற்றும் நடிகர்கள், நடிகைகள் இணைந்து நடிகை கோவை மல்லிகா மென் மேலும் வளர வாழ்த்துக்கள் கூறினார்கள்.

# காஞ்சிப் பட்டுடன் வந்த நிர்மலா சீதாராமன்: 9 பட்ஜெட்டுகள், 9 கைத்தறி புடவைகளின் ஸ்பெஷல்!

புதுடெல்லி, பிப்.2.-

நாடாளுமன்றத்தில் 202627ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், தமிழகத்தின் புகழ்பெற்ற காஞ்சிபுரம் கைத்தறி நெசவு பட்டுப் புடவையை அணிந்து வந்தார். தொடர்ந்து 9வது முறையாக பட்ஜெட்டை தாக்கல் செய்த அவர், ஒவ்வொரு முறையும் நாட்டின் கைத்தறி பாரம்பரியத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் புடவைகளை அணிந்து வருவது வழக்கம்.

, நிர்மலா சீதாராமன் அடர் இளஞ்சிவப்பு நிற காஞ்சிபுரம் பட்டுப் புடவை அணிந்திருந்தார். ஊதா நிற கட்டம் போட்ட காஞ்சிபுரம் பட்டுப் புடவையில், இளம் பொன் பழுப்பு நிற பார்டர் இடம்பெற்றிருந்தது. இந்த மெஜந்தா நிற சேலையில் ஊதா நிற பார்டர் உள்ளது. இது ஒரு கம்பீரமான, ஆனால் பாரம்பரிய தோற்றத்தை வெளிபடுத்துகிறது. அத்துடன் நிர்மலா சீதாராமன் அடர் நிற கம்பளி சால்வையும், மஞ்சள் நிற ஸ்வெட்டரும் அணிந்திருந்தார். பட்டு மற்றும் நுணுக்கமான கைவினைத்திறனுக்காக புகழ்பெற்ற காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், இந்தியாவின் மிகவும் பிரசித்தி பெற்ற கைத்தறி நெசவுகளில் ஒன்றாகும்.

தமிழகம் இந்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ளும் நிலையில், தமிழகத்தை பூர்வீகமாக கொண்ட நிர்மலா சீதாராமன் காஞ்சிபுரம் பட்டுப் புடவைகளை அணிந்திருப்பது கவனம் பெற்றுள்ளது.

நிர்மலா சீதாராமன் தனது பட்ஜெட் தாக்கலின் போது கைத்தறி மற்றும் கைவினைஞர்களால் உருவாக்கப்பட்ட கைவினைப் புடவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பாரம்பரியத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார்.

2019ல் தனது முதல் பட்ஜெட்டின் போது, அவர் இளஞ்சிவப்பு (பிங்க்) நிற மங்களகிரி ( ஆந்திரா) புடவையை அணிந்தார்.

2020ல் மஞ்சள், பொன்னிறம் மற்றும் பச்சை கலந்த பட்டுப் புடவையை அணிந்திருந்தார்.

2021ல் சிவப்பு, வெள்ளை மற்றும் மஞ்சல் நிற வடிவியல் கோலங்கள் கொண்ட போச்சம்பள்ளி இக்கத் (தெலங்கானா) புடவையைத் தேர்வு செய்திருந்தார்.

2022ல் ஒடிசா மாநில கைவினைஞர்களின் திறமையை உலகிற்கு வெளிக்காட்டும் வகையில், பழுப்பு நிற பொம்காய் புடவையை அணிந்திருந்தார்.

2023ல் கர்நாடகாவின் கசூதி எம்பிராய்டரி வேலைப்பாடுகள் மற்றும் கோயில் கோபுர சித்திரங்கள் கொண்ட இல்கல் சிவப்பு நிறப் புடவையை அணிந்தார்.

2024ல் இடைக்கால பட்ஜெட்டுக்கு மேற்கு வங்கத்தின் நீல நிற தசர் மற்றும் காந்தா வேலைப்பாடுகள் கொண்ட புடவை அணிந்திருந்தார்.

2024 பொது பட்ஜெட்டுக்கு ஊதா நிற பார்டர் கொண்ட வெள்ளை நிற மங்களகிரி (ஆந்திரா) புடவை அணிந்திருந்தார்.

2025ல், பத்மஸ்ரீ விருது பெற்ற துலாரி தேவி பரிசளித்த தந்த நிற மதுபானி கை ஓவியப் புடவையை அவர் அணிந்திருந்தார். மதுபானி ஓவியம் பிஹார் மாநிலத்தின் முக்கியமான கலைப்படைப்பாக உள்ளது.

2025ல் பிஹார் தேர்தல் நடக்கவிருந்த சூழலில் அம்மாநில பாரம்பரிய புடவையும் அணிந்திருந்த நிர்மலா சீதாராமன், இந்த ஆண்டும் தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் நடக்கவுள்ள நிலையில் காஞ்சிபுரம் பட்டுப் புடவை அணிந்துள்ளார்.

# குடியரசு தின அணிவகுப்பு விழாவில் செந்திலாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் பங்கேற்பு



தென்காசி : பிப் 02.-

சென்னையில் ஜனவரி 26ல் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பு முகாமில் தென்காசி அருள்மிகு செந்தில் ஆண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களான முதலாம் ஆண்டு ணிசிணி துறையைச் சார்ந்த ஜினுப்பிரியா, இரண்டாம் ஆண்டு மெக்கானிக்கல் துறையைச் சேர்ந்த அஸ்வின் ராஜா சிறப்பாக பங்கேற்று கல்லூரிக்கும் கல்லூரி நிர்வாகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

தேசிய ஒற்றுமை ஒழுக்கம் கட்டுப்பாடு மற்றும் தேசபக்தி ஆகியவற்றை வலியுறுத்தும், இந்த அணிவகுப்பு முகாமில் இரு மாணவர்களும் கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டு தங்கள் திறமையை வெளிப்படுத்தினர். இந்த அனுபவம் மாணவர்களுக்கு தலைமை திறன் குழு ஒத்துழைப்பு மற்றும் தேசப்பற்று ஆகியவற்றை வளர்க்கும் வகையில் அமைந்ததாக தெரிவித்துள்ளனர். இந்த அரிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த தமிழக அரசுக்கும், மாநில நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் அவர்களுக்கும், தொழில் நுட்ப கல்வி இயக்கத்தின் இயக்குனர் மற்றும் ஆணையா அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை, தொழில் நுட்ப கல்வி இயக்கக நாட்டு நலப் பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்களுக்கும், கல்லூரிக்கும் கல்லூரி மாணவர்கள் தங்களது நன்றியினை தெரிவித்தனர்.

நிர்வாகத்திற்கும் கல்லூரியின் தலைவர் டாக்டர்.எம்..புதிய பாஸ்கர் தாளாளர் கல்யாணி புதிய பாஸ்கர், முதல்வர் ஒய்.சேவியா இருதயராஜ், பொது மேலாளர் டி.மணிகண்டன் மற்றும் அனைத்து துறை தலைவர்கள் ஆசிரியர் பெருமக்கள் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர்களான கருப்பசாமி, வினோத், சுடர் சுபா ஆகியோர் அனைவரும் குடியரசு தின அணிவகுப்பு முகாமில் கலந்து கொண்ட மாணவர்களை பாராட்டி பரிசுகளை வழங்கினர்.

# “நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உத்தரவாதம் அளிக்கும் பட்ஜெட்” ஜி.கே.வாசன் புகழாரம்



மத்திய பட்ஜெட் மக்களுக்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பேருதவியாக இருக்கும் என தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘2026-2027 ஆம் நிதி ஆண்டிற்கான மத்திய அரசின் பட்ஜெட் வரவேற்கத்தக்கது, பாராட்டுக்குரியது, வாழ்த்துக்குரியது. காரணம் நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உத்தரவாதம் அளிக்கும் வகையில் பட்ஜெட் அமைந்திருக்கிறது.

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் முதல் பெண்மணியாக தொடர்ச்சியாக 9 ஆவது முறையாக பட்ஜெட்டை தாக்கல் செய்துள்ளது பாராட்டுக்குரியது. நிலையான பொருளாதார வளர்ச்சி, அனைவரையும் உள்ளடக்கிய மேம்பாடு மற்றும் இளைஞர்கள் ஆகிய 3 முக்கிய கடமைகளை உள்ளடக்கிய பட்ஜெட்டாக அமைந்திருப்பதால் பயனளிக்கும்.

வேளாண் துறைக்கு ரூ. 1,62,671 கோடி, ஊரக மேம்பாட்டுக்கு ரூ. 2,73,108 கோடி, கல்வித்துறைக்கு ரூ. 1,39,289 கோடி, சிறு குறு நடுத்தர தொழில் வளர்ச்சிக்கு ரூ.10,000 கோடி, சுகாதாரத்துறைக்கு ரூ. 1,04,599 கோடி போக்குவரத்துத்துறைக்கு ரூ. 5,98,520 கோடி, உள்துறைக்கு ரூ. 2,55,234 கோடி, பாதுகாப்பு துறைக்கு ரூ. 5,94,585 கோடி என பல்வேறு துறைகளுக்கு நிதியை ஒதுக்கியதால் அத்துறைகளின் மூலம் நாட்டு மக்கள் பயனடைவார்கள்.

மகளிர் சுய உதவிக்குழு பெண்களுக்கு SHEE MART கடைகள், தென்னை மேம்பாட்டுத்திட்டம், பால் உற்பத்தியை அதிகரிக்க, கோழி வளர்ப்பை ஊக்குவிக்க, 5 பல்கலை நகரங்கள், மாவட்டம் தோறும் மாணவிகளுக்கான விடுதிகள், 5 மருத்துவ மையங்கள், காதி, கைத்தறி, கைவினைப் பொருட்களுக்காக ஸ்ரீ மகாத்மாகாந்தி கிராம சுவராஜ் திட்டம், பயோ பார்மா சக்தி திட்டத்திற்கு ரூ. 10,000 கோடி நிதி ஒதுக்கீடு, மின்னணு தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ரூ. 40,000 கோடி நிதி ஒதுக்கீடு மற்றும் 2 ஆம் நிலை, 3 ஆம் நிலை நகரங்கள் மற்றும் கோயில் நகரங்களை மேம்படுத்த உட்கட்டமைப்புக்கு,

ஜவுளித்துறைக்கு புதிய மெகா ஜவுளி பூங்காக்கள், வேலை வாய்ப்புகளை அதிகரிக்க பிரதான செயல்திட்டம், மாநில அரசுகளுடன் இணைந்து சந்தன மர வளர்ப்பு, கடலோர சரக்கு போக்குவரத்தை மேம்படுத்த, புதிய தேசிய நீர்வழித்தடங்கள், மீன் உற்பத்தியை பெருக்க, வாகன விபத்துக்கான இழப்பீட்டுக்கு வருமான வரி விலக்கு, வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு முதலீடு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் பட்ஜெட்டில் இடம் பெற்றிருந்ததால் அனைத்து தரப்பு மக்களும் முன்னேற முடியும்.

குறிப்பாக தமிழகத்திற்கு பட்ஜெட்டில் உள்ள முக்கிய அம்சங்கள் அரிய வகை கனிமங்கள் எடுப்பதற்கான வழித்தடம், சென்னை ஸ்ரீ பெங்களூரு ஹைதராபாத் இடையே அதிவேக ரயில் வழித்தடம், பொதிகை மலையில் மலையேற்ற சுற்றுலா வழித்தடம், பழவேற்காட்டில் உலகத்தரத்தில் பறவைகள் காட்சி மையம் ஆகியவை தமிழ்நாட்டு மக்களுக்கும், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பேருதவியாக இருக்கும்.

எனவே மத்திய நிதி அமைச்சர் தாக்கல் செய்துள்ள பட்ஜெட் ஒட்டு மொத்த நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கும் மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உத்தரவாதம் அளிக்கும் வகையில் அமைந்திருப்பதால் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் பட்ஜெட்டை வரவேற்று மத்திய நிதி அமைச்சரை பாராட்டி, வாழ்த்துகிறேன்’ எனத் தெரிவித்தார்.

# தேர்தல் நடைபெறாத மாநிலங்களுக்கும் பட்ஜெட்டில் அறிவிப்புகள்: நிர்மலா சீதாராமன்




டெல்லி, பிப்.2-

“இந்த பட்ஜெட்டில் தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களுக்கும் மற்றும் தேர்தல் நடைபெறாத மாநிலங்களுக்கும் அறிவிப்புகள் வெளியாகியுள்ளது” என நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

மத்திய பட்ஜெட்டுக்குப் பிந்தைய செய்தியாளர் சந்திப்பில் பேசிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், “ நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தைத் தக்கவைக்க அரசாங்கம் உந்துதல் அளித்து வருகிறது. முதன்மையாக, நாங்கள் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மூலம் சூழலமைப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறோம், இது தொடரும்.

நாங்கள் சீர்திருத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் போதுமான சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு இது தொடரும்.

21 ஆம் நூற்றாண்டு முற்றிலும் தொழில்நுட்பத்தால் இயக்கப்படுகிறது. எனவே, பொதுமக்களுக்குப் பயனளிக்கும் வகையில் தொழில்நுட்பங்கள் கொண்டுவரப்படுவதை நாங்கள் உறுதி செய்வோம்.

நகரங்கள் இந்தியாவின் வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் வாய்ப்புகளின் இயந்திரங்களாக உள்ளன. அரசாங்கம் இப்போது இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்கள் மற்றும் நவீன உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் தேவைப்படும் கோயில் நகரங்கள் மீது கவனம் செலுத்துகிறது. இந்த பட்ஜெட், நகரப் பொருளாதாரப் பகுதிகளை (சிணிஸி) அவற்றின் குறிப்பிட்ட வளர்ச்சி இயக்கிகளின் அடிப்படையில், பொருளாதார ஆற்றலை பெருக்கும் நோக்கம் கொண்டுள்ளது.

சீர்திருத்தம் மற்றும் முடிவுகளின் அடிப்படையிலான நிதி செயல்முறையுடன் திட்டங்களைச் செயல்படுத்த, ஒரு நகரப் பொருளாதாரப் பகுதிக்கு 5 ஆண்டுகளில் ரூ. 5000 கோடி ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளது. ஒரு நகரத்திற்கு ஆண்டுக்கு ரூ. 1000 கோடி வழங்கப்படுகிறது. இந்த முக்கியத்துவம் பெரும்பாலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு அளிக்கப்பட உள்ளது.

செமிகண்டக்டர் திட்டத்துக்கு இரண்டு முக்கிய அறிவிப்புகள் வெளியாகியுள்ளது. அவை இந்தியாவின் பங்களிப்பு மற்றும் அறிவுசார் சொத்துரிமை தொடர்பான விஷயங்களை மேம்படுத்தும். 40,000 கோடி ரூபாய் மதிப்பிலான மின்னணு பாகங்கள் உற்பத்தித் திட்டம், மின்னணுத் துறையில் தற்சார்பு நிலையை அடைய பெரிய ஊக்கமளிக்கிறது. இந்தியா தனது சொந்த உற்பத்திப் பொருட்களைக் கொண்டு தனது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் வகையில், அரிய மண் உலோகங்களுக்கான வழித்தடங்களை அமைப்பதையும் நாங்கள் அறிவித்துள்ளோம்.

எனவே, இத்தகைய கனிமங்களை நாங்கள் கண்டறிந்து, அவற்றை ஆய்வு செய்து, பதப்படுத்தி, நமக்குக் கிடைக்கச் செய்யும்போது, அரிய மண் உலோகங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கான நமது சார்புநிலை குறையும். இந்த அரிய மண் உலோக வழித்தடங்கள் ஒடிசா, கேரளா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாட்டில் அமைய உள்ளன.

எனவே, இவை மிகவும் முக்கியமான முன்னேற்றங்கள். இவை இந்தியப் பொருளாதாரத்தில் பலதரப்பட்ட, ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தப் போகின்றன. இதனால் காந்தங்கள் மற்றும் அரிய மண் உலோகங்களுக்கான நமது சார்புநிலை குறைக்கப்படும்" என்று அவர் கூறினார்.

மேலும், “ இந்தியாவில், செயற்கை நுண்ணறிவு நமக்கு வாய்ப்புகளைத் தர வேண்டும். அதாவது நமது மக்களுக்கு இதனால் வேலைவாய்ப்பு இருக்க வேண்டும். அது மனித முயற்சிகளுக்கு மாற்றாக இருக்க முடியாது. எனவே, செயற்கை நுண்ணறிவை எவ்வாறு பயன்படுத்துவது, நாம் என்ன திறனை உருவாக்க வேண்டும் மற்றும் அதிலிருந்து என்னென்ன தயாரிப்புகள் வெளிவருகின்றன என்பதை நமக்காக நாமே மறுவரையறை செய்கிறோம். செயற்கை நுண்ணறிவை சிந்திக்காமல் பின்பற்றுவதற்குப் பதிலாக, அதிலிருந்து நாம் நன்மைகளை உருவாக்க வேண்டும்."

இந்த வரவு செலவுத் திட்டத்தில் தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களுக்கும் மற்றும் தேர்தல் நடைபெறாத மாநிலங்களுக்கும் அறிவிப்புகள் வெளியாகியுள்ளன” என்றார்.

# ஒரு ரூபாய் வரி கட்டினால் 29 பைசா தரும் ஒன்றிய அரசு: செந்தில் பாலாஜி காட்டம்

கோவை, பிப்.2-

கோவை மாவட்டம் குனியமுத்தூரில் முன்னாள் அமைச்சரும், திமுக மண்டல பொறுப்பாளருமான செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:நிதி இல்லாமல் எந்த திட்டங்களும் துவங்கப்படுவதில்லை. தமிழகத்தில் மக்களின் கோரிக்கையை ஏற்று நேரடியாக முதல்வர் சென்று அதனை ஆய்வு செய்து நிதிகள் ஒதுக்கப்பட்டு திட்டங்கள் துவங்கப்படுகிறது. அந்த திட்டப்பணிகளையும் முதல்வரே ஆய்வு செய்து வருகிறார்.

எடப்பாடி பழனிச்சாமி ஒன்றிய அரசிடம் ஒரு ரூபாய் வரி கட்டினால் 29 பைசா மட்டுமே நமக்கு தருவதைப் பற்றி கேள்வி எழுப்புவாரா? நிதியை சேர்த்து தர வேண்டும் என்று கேட்பாரா? 2014ம் ஆண்டு திமுக காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது 27 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு சவரன் தங்கம் தற்போது 1 லட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேல் விற்பனை செய்யப்படுவது குறித்து ஒன்றிய அரசிடம் கேள்வி எழுப்புவரா?’’ என்றார்.

# மத்திய பட்ஜெட்டால் தமிழ்நாட்டின் சிறு தொழில்கள் அதிகம் பயன்பெறும்: எடப்பாடி பழனிசாமி



சென்னை, பிப்.2-

‘‘மத்திய பட்ஜெட்டில் சிறு, குறு தொழில் மேம்பாட்டுக்காக பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, நிதி ஆதாரம் பெறுவதை உறுதி செய்ய ரூ.2,000 கோடி, மற்றும் சிறு, குறு தொழில் வளர்ச்சி நிதியாக ரூ. 10,000 கோடி ஒதுக்கீடு போன்றவை மிக உதவியாக இருக்கும். சிறு, குறு தொழில் அதிக அளவில் உள்ள தமிழ்நாடு இதனால் பயன்பெறும்’’ என்று அதிமுக பொதுச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: இந்திய நாட்டின் 2025 2026ஆம் ஆண்டுக்கான பொருளாதார அறிக்கை கடந்த 29.1.2026 அன்று வெளியிடப்பட்டுள்ள நிலையில், 20262027ஸ்ரீ ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலான மத்திய அரசால் (ஞாயிற்றுக் கிழமை) நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து 9ஆவது முறையாக நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து புதிய வரலாற்றுச் சாதனையை படைத்துள்ள மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலக அளவில் போர் போன்ற பதற்றத்தால் உள்ள உறுதியற்ற சூழ்நிலையிலும், இந்திய பொருளாதார வளர்ச்சி 20252026க்கு 6.5 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாக உயரும் என்றும், 20262027ல் 6.8 முதல் 7.2 சதவீதமாக இருக்கும் என்றும் 2025 2026ஆம் ஆண்டுக்கான பொருளாதார அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பொருளாதார நிலையில் இந்தியா வலுவான நிலையில் உள்ளதைக் காட்டுகிறது.

இந்த சூழ்நிலையில் 20262027ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, நிதி நிலை மேலாண்மையை வலுப்படுத்தும் வகையில் நிதிப் பற்றாக்குறையையும், பொருளாதார உற்பத்தி மதிப்பில் கடன் அளவைக் குறைக்க எடுத்துள்ள முயற்சிகள் வரவேற்கத்தக்கது. இது வருங்கால பொருளாதார வளர்ச்சியை மேலும் வலுப்படுத்தும்.

இறக்குமதியை குறைக்க, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க, ஆராய்ச்சி, உற்பத்தி, உயர் தொழில்நுட்பம் சார்ந்த கட்டமைப்புகள் மேம்பாடு, செயற்கை நுண்ணறிவு, மின்னணுசார் உற்பத்தி, மருந்துகள், ஜவுளி, கண்டெய்னர் உற்பத்தி போன்ற துறைகளில் உற்பத்தியை ஊக்குவிக்க பூங்காக்கள், உயிரி மருத்துவ பூங்கா, உற்பத்தி மண்டலங்கள் போன்ற பல முயற்சிகளை இந்த நிதிநிலை அறிக்கையில் முன்மொழிந்துள்ளதை பாராட்டுகிறேன். இதற்கான நிதி ஆதாரங்களும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, ஜவுளி மேம்பாடு திட்டம் திருப்பூர், கரூர் போன்ற பகுதிகளுக்கு பயனளிக்கும்.

சரக்கு வேக வழித்தடப் பாதைகள், வேக ரயில் பாதைகள், நீர் வழிப் பாதைகள் மேம்பாடு போன்றவை, போக்குவரத்துத் துறையில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். ஆயுர்வேதம், கால்நடை துறை முதலியவற்றுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளதைப் பாராட்டுகிறேன். சிறு, குறு தொழில் மேம்பாட்டுக்கு பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, நிதி ஆதாரம் பெறுவதை உறுதி செய்ய ரூ. 2,000 கோடி, மற்றும் சிறு, குறு தொழில்

வளர்ச்சி நிதியாக ரூ. 10,000 கோடி ஒதுக்கீடு போன்றவை மிக உதவியாக இருக்கும். சிறு, குறு தொழில் அதிக அளவில் உள்ள தமிழ்நாடு இதனால் பயன்பெறும்.

இந்த நிதிநிலை அறிக்கை இந்தியாவின் வளர்ச்சிக்கு வழி வகுப்பதோடு, உலக அளவில் இந்தியா பொருளாதார நிலையில் வலுவான நாடாக உயர்வதற்கு வழிவகுக்கும் என்பதால், பிரதமருக்கும், நிதி அமைச்சருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

# “வளர்ச்சியடைந்த பாரதம் எனும் இலக்கை எட்டிப்பிடிக்க உதவும் பட்ஜெட்” : டிடிவி.தினகரன்



சென்னை, பிப்.2-

“மத்திய அரசின் இந்த நிதிநிலை அறிக்கை வளர்ச்சியடைந்த பாரதம் எனும் இலக்கை எளிதாக எட்டிப்பிடிக்க அனைத்து வகையிலும் உதவியாக இருக்கும்” என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன் தெரிவித்துள்ளார்.

மத்திய பட்ஜெட் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘பிரதமர் நரேந்திர மோடியின் சீரிய தலைமையில், இந்தியாவின் நிதிநிலை அறிக்கையைத் தொடர்ந்து 9வது ஆண்டாக தாக்கல் செய்திருப்பதோடு, அதிக முறை நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த நிதியமைச்சர்களின் பட்டியலில் இரண்டாவது இடத்திற்கும் முன்னேறியிருக்கும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு எங்களது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைவருக்குமான வளர்ச்சி எனும் உன்னத கோட்பாட்டை முன்னிறுத்தித் தயாரிக்கப்பட்டிருக்கும் மத்திய நிதிநிலை அறிக்கை, வளர்ச்சியடைந்த பாரதம் எனும் இந்தியாவின் இலக்கை எளிதாக எட்டிப்பிடிப்பதற்கான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக அமைந்திருப்பது வரவேற்புக்குரியது.

ஆதிச்சநல்லூர் உலகத்தரம் வாய்ந்த சுற்றுலாத் தளமாக மேம்படுத்தப்படுவதோடு, கலாச்சார செழுமையை விளக்கும் வகையில் கலாச்சார மையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு தமிழர்களின் பாரம்பரியத்தைப் பெருமைப்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.

அதோடு ஐதராபாத் முதல் சென்னை வரையிலும், சென்னை முதல் பெங்களூரு வரையிலும் அதிவேக ரயில் வழித்தடங்கள், பழவேற்காடு ஏரியில் பறவைகளைக் காண பிரத்தியேக காட்சி மையம், பொதிகை மலையில் மலையேற்றத்தை ஊக்குவிக்கத் திட்டம் என தமிழகத்திற்கென பல்வேறு திட்டங்கள் மத்திய நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

விவசாய வளங்களை அணுக ஒருங்கிணைந்த அமைப்பு உருவாக்கம், 2030 ஆம் ஆண்டிற்குள் முந்திரி மற்றும் கோகோ உற்பத்தியில் இந்தியாவைத் தன்னிறைவு அடையச் செய்யவும், ஏற்றுமதிக்கான திறனை அதிகரிக்கவும் பிரத்தியேக திட்டம், தேங்காய் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் தேங்காய் ஊக்குவிக்குப்புத் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் வேளாண்மை மீதான மத்திய அரசின் அக்கறையை வெளிப்படுத்துகின்றன.

உயர் கல்வித்துறையில் முதலீடு செய்வதன் மூலம் புதிய கல்வி நிறுவனங்கள், ஐந்து பல்கலைக்கழக நகரங்கள், மும்பை ஐஐடியுடன் இணைந்து 15 ஆயிரம் பள்ளிகள் மற்றும் 500 கல்லூரிகளில் AVGC ( Animation, Visual Effects, Gaming and Comics ) எனும் படைப்பாற்றல் ஆய்வகங்கள் போன்றவற்றோடு நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்கள் விடுதிகள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு பெண் கல்வியை மேலும் ஊக்குவிக்கவும் அவர்கள் தொழில் முனைவோர்களாக உருவெடுக்கவும் வழிவகை செய்கின்றன.

எதிர்காலச் சாதனையாளர்களை உருவாக்க 10 ஆயிரம் கோடி ரூபாயில் சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான வளர்ச்சி நிதி அமைப்பு, உயர்தர விளையாட்டுப் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஆராய்ச்சிக்கான முன்னெடுப்பு, பிரம்மாண்ட ஜவுளிப் பூங்காக்கள், காதி மற்றும் கைத்தறித் தொழில்களை வலுப்படுத்திடும் வகையில் மகாத்மா காந்தி கிராம சுயராஜ்ய திட்டம் என நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கும் திட்டங்கள் தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதோடு, வேலைவாய்ப்பையும் பெருக்கும் வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்துள்ளன.

புற்றுநோய் மற்றும் நீரிழிவு உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு தேவையான 17 வகையான மருந்துகள் மீதான அடிப்படை சுங்க வரிக்கு முழுமையான விலக்கு, தனியார்த் துறையோடு இணைந்து நாடு முழுவதும் மருத்துவ மையங்கள், மருந்து தயாரிப்புக்கான Bio Pharma Shakti திட்டத்திற்குப் பத்தாயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு, ஆயுர்வேத மருந்தகங்களின் தரத்தை உயர்த்துவதோடு, ஆயுர்வேத மருத்துவத்திற்காக மூன்று கல்வி நிறுவனங்கள் என மருத்துவத்துறைக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளித்திருப்பது பாராட்டுதலுக்குரியது.

தனிநபர் வருமான வரிவிலக்கு உச்சவரம்பில் மாற்றமில்லை என்றாலும், வருமான வரி கணக்கு தாக்கல் செய்யும் நடைமுறையை எளிமையாக்கியிருப்பதும், திருத்துவதற்கான கால அவகாசத்தை மார்ச் 31 ஆம் தேதி நீட்டித்திருப்பது சற்று ஆறுதலைத் தருகிறது. மேலும் மின்சார வாகனங்களை ஊக்குவிக்கும் வகையில் லித்தியம் பேட்டரி மற்றும் வாகன விபத்து இழப்பீட்டுத் தொகைக்கு வரிவிலக்கு அறிவித்திருப்பது மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அடுத்த பத்து ஆண்டுகளில் செயல்படுத்துவதாக அறிவிக்கப்பட்டிருக்கும் கேலோ இந்தியா திட்டம் விளையாட்டு வீரர்களுக்கு புதிய நம்பிக்கையையும் புத்துணர்வையும் அளிக்கக் கூடியதாக அமைந்துள்ளது.

இருப்பினும், தமிழக மக்கள் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருந்த மதுரை, கோவையில் மெட்ரோ ரயில் திட்டங்கள், ஐஐடி கல்வி நிறுவனங்கள் போன்ற தமிழகத்திற்கென முக்கிய அறிவிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெறாமல் போனது சற்று ஏமாற்றத்தை அளிக்கிறது.

பாரம்பரிய தொழில்துறைகளுக்குப் புத்துயிர் அளித்தல், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களை உருவாக்குதல், உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், நகரப் பொருளாதார பகுதிகளை வலுவடையச் செய்தல், நீண்டகால வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மையை உறுதிப் படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கும் மத்திய அரசின் இந்த நிதிநிலை அறிக்கை வளர்ச்சியடைந்த பாரதம் எனும் இலக்கை எளிதாக எட்டிப்பிடிக்க அனைத்து வகையிலும் உதவியாக இருக்கும் அறிக்கையாக அமைந்துள்ளது.’ எனத் தெரிவித்துள்ளார்.

# "2021-22 நிதியாண்டில் எடுக்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்பட்டுள்ளது": நிர்மலா சீதாராமன்



டெல்லி, பிப்.2-

2025-26 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறையை 4.5 சதவீதத்திற்கும் கீழ் குறைக்க 2021 22 நிதியாண்டில் எடுக்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியுள்ளதாவது: 2025-26 ல் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 56.1 சதவீதமாக இருந்த உற்பத்திகடன் விகிதம், 2026-27 பட்ஜெட் மதிப்பீட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 55.6 சதவீதமாக இருக்கும்.

உற்பத்திகடன் விகிதம் குறைந்து வருவது, வட்டி செலுத்துதல்களுக்கான செலவைக் குறைக்கும். கடன் அல்லாத வரவுகளின் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடு, ரூ. 34 லட்சம் கோடி. இதில் மத்திய அரசின் நிகர வரி வரவுகள் ரூ. 26.7 லட்சம் கோடி. மொத்த செலவினங்களின் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 49.6 லட்சம் கோடி. இதில் மூலதனச் செலவு சுமார் ரூ. 11 லட்சம் கோடி

குறையும் நிதிப் பற்றாக்குறை: 202526 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறையை 4.5 சதவீதத்திற்கும் கீழ் குறைக்க 2021 - 22 நிதியாண்டில் செய்யப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்பட்டுள்ளது.

2025-26 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டில், நிதிப் பற்றாக்குறை 2025 26 ம் ஆண்டின் பட்ஜெட் மதிப்பீட்டுக்கு இணையாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.4 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

2026-27ம் ஆண்டு பட்ஜெட் மதிப்பீட்டில் நிதிப் பற்றாக்குறை ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.3 சதவீதமாக இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நந்தன் கால்வாய் சீரமைப்பு திட்டத்துக்கான நிலஎடுப்பு பணிகளை உடனே மேற்கொள்க: ராமதாஸ்



சென்னை, பிப்.2-

நந்தன் கால்வாய் சீரமைப்பு திட்டத்திற்கான நிலஎடுப்பு பணிகளை உடனே மேற்கொள்ள வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளின் நூற்றாண்டு கால கனவுத் திட்டமான நந்தன் கால்வாய் திட்டத்தில் சாத்தனூர் அணையின் உபரி நீரை 23 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊட்டுக்கால்வாய் மூலம் நந்தன் கால்வாயுடன் இணைக்க, நில எடுப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் அதற்கான செலவிட்டுத்தொகை ரூ.42,69,51,310க்கு கடந்த 29ம் தேதி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், கவுத்தி மலையில் உருவாகும் துரிஞ்சல் ஆற்றின் குறுக்கே கீரனூரில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட அணையிலிருந்து கால்வாய்கள் மூலம் தண்ணீரைக் கொண்டு சென்று திருவண்ணாமலை மாவட்டத்தில் 14 ஏரிகள், விழுப்புரம் மாவட்டத்தில் 22 ஏரிகள் என மொத்தம் 36 ஏரிகளை நிரப்பி, பல்லாயிரம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி ஏற்படுத்தித் தந்தது தான் நந்தன் காலவாய் திட்டம் ஆகும்.

இத்திட்டத்தின் ஆதாரமாகத் திகழ்ந்த கீரனூர் அணை 200 ஆண்டுகளுக்கு முன்பே உடைந்து விட்ட நிலையில், காலப்போக்கில் கால்வாய்களும் சீரழிந்து விட்டன. அணையையும், கால்வாய்களையும் சீரமைத்து நந்தன் கால்வாய் திட்டத்தை முழுமையாக நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று 1930களின் இறுதியில் ராஜாஜி ஆட்சிக் காலத்திலிருந்து கோரிக்கைகள் எழுப்பப்பட்டாலும் கூட, கடந்த 96 ஆண்டுகளாக அவற்றுக்கு செயல் வடிவம் கொடுக்கப்படவில்லை.

மண்ணின் மைந்தரும், எனது மதிப்பிற்குரியவருமான ஏ.ஜி என்றழைக்கப்படும் ஏ.கோவிந்தசாமி தமிழக அமைச்சராக இருந்த போது, நந்தன் கால்வாய்த் திட்டத்தின் தேவையை உணர்ந்து அதற்கான பணிகளை மேற்கொண்டார். அண்ணா காலத்தில் தொடங்கி கருணாநிதி காலத்திலும் தொடர்ந்த சீரமைப்புப் பணிகள் முடிவடைவதற்கு முன்பாகவே, நல்வாய்ப்புக்கேடாக ஏ.ஜி. காலமானதால், கால்வாய் பணிகள் முழுமை அடையவில்லை. அதன்பின்னர் எம்.ஜி.ஆர் காலத்தில் ஓரளவு பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவை முழுமை பெறவில்லை. காலப்போக்கில் கால்வாய்கள் சீரழிந்து, இருந்த தடம் தெரியாமல் மறைந்து விட்டன.

நந்தன் கால்வாயை சீரமைப்பதற்கான கோரிக்கைகள் கடந்த 35 ஆண்டுகளாக மீண்டும் எழுப்பப்பட்டு வருகின்றன. ஆனாலும், எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. 2019 ம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்காக அதிமுகவுடன் கூட்டணி அமைத்த போது, அதற்காக முன்வைக்கப்பட்ட 10 கோரிக்கைகளில் நந்தன் கால்வாய் சீரமைப்பு மற்றும் தென் பெண்ணையாறு துரிஞ்சலாறு இணைப்புத் திட்டம் உள்ளிட்ட 20 நீர்ப்பாசனப் பெருந்திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பதும் ஒன்றாகும். சாத்தனூர் அணையிலிருந்து திறந்துவிடப்படும் உபரி நீர் தென்பெண்ணையாற்று வழியாக கடலில் கலக்கும் தண்ணீரை கால்வாய் அமைத்து அந்நீரை திருப்பி விட்டால் சுமார் 10 டி.எம்.சி தண்ணீரால் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும்.

நந்தன் கால்வாய்த் திட்டம் செயல்படுத்தப்படும் என்று விக்கிரவாண்டி இடைத்தேர்தல் பரப்புரையின் போது அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிசாமி உறுதியளித்தார். இதனை தொடர்ந்து 28.01.2025 ம் தேதி விழுப்புரத்தில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் ஸ்டாலின் நந்தன் கால்வாய் திட்டம் செயல்படும் என அறிவித்தார். இத்திட்டம் மூலம் தென்பெண்ணையாற்றை செய்யாற்றின் வழியாக பாலாற்றுடன் இணைத்து நந்தன் கால்வாய்க்கு பாசன வசதி அளித்து அமைக்கப்படும் புதிய கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு சென்று 35 ஏரிகளை நிரப்பிய பிறகு பனமலை ஏரியை நிரப்ப வேண்டும். பனமலை ஏரியிலிருந்து 10க்கும் மேற்பட்ட சிறிய ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்ல முடியும். பனமலை ஏரி 700 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும்.

நந்தன் கால்வாய்த் திட்டம் மட்டும் செயல்படுத்தப்பட்டால் திருவண்ணாமலை விழுப்புரம் மாவட்டங்களில் பல்லாயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். அவ்வாறு பாசன வசதி பெற்றால் அப்பகுதியிலுள்ள விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும். அது இரு மாவட்டங்களின் வளர்ச்சிக்கும் பெருமளவில் உதவும்.

இத்திட்டத்திற்கான நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் திண்டிவனம் வருகைதரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நிலஎடுப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டி விவசாயிகளின் கனவை நனவாக்க வேண்டும். இது குறித்து கடந்த 2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளேன் என்பதையும் நினைவு கூறுகிறேன்' எனத் தெரிவித்தார்.

# ஜனவரியில் ஓய்வு பெற்ற 5 ஆயிரம் அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் எங்கே? அன்புமணி கேள்வி



சென்னை, பிப்.2.-

"தமிழ்நாட்டில் புதிதாக அறிவிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் ஜனவரி 1ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்துவிட்டதாக அரசு அறிவித்திருந்த நிலையில், ஜனவரி மாதத்துடன் ஓய்வு பெற்ற சுமார் 5000 அரசு ஊழியர்களில், புதிய திட்டத்தின்படி ஓய்வூதியம் பெறத் தகுதியானவர்களுக்கு அதற்கான ஆணை எதுவும் வழங்கப்படவில்லை. ஜனவரி மாதத்தில் ஓய்வு பெற்ற 5 ஆயிரம் அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் எங்கே?" என பாமக தலைவர் அன்புமணி கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'தமிழ்நாட்டில் புதிதாக அறிவிக்கப்பட்ட உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் ஜனவரி 1ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்துவிட்டதாக அரசு அறிவித்திருந்த நிலையில், ஜனவரி மாதத்துடன் ஓய்வு பெற்ற சுமார் 5000 அரசு ஊழியர்களில், புதிய திட்டத்தின்படி ஓய்வூதியம் பெறத் தகுதியானவர்களுக்கு அதற்கான ஆணை எதுவும் வழங்கப்படவில்லை. அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் திமுக அரசு திட்டமிட்டு ஏமாற்றி வருகிறது என்று பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து கூறி வந்தக் குற்றச்சாட்டை இது உறுதி செய்துள்ளது.

தமிழ்நாட்டில் 2003ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ள புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து விட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் 26 ஆண்டுகளாக போராடி வருகின்றனர். பழைய ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்துவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த திமுக, ஐந்தாண்டுகளாகியும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றாததைக் கண்டித்து ஜனவரி 6ஆம் தேதி முதல் அரசு ஊழியர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம் மேற்கொள்ளப் போவதாக அறிவித்தனர். அப்போராட்டத்தைத் தடுக்கும் வகையில், கடந்த 3ஆம் தேதி அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை திமுக அரசு அறிவித்தது.

திமுக அரசால் அறிவிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் ஒரு மோசடியானத் திட்டம்; அதனால் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு எந்தப் பயனும் ஏற்படாது என்று அப்போதே குற்றஞ்சாட்டிய நான், இந்த மோசடித் திட்டமும் கூட திமுக ஆட்சிக்காலத்திற்குள் நடைமுறைக்கு வராது என எச்சரித்திருந்தேன். ஆனால், கடந்த 10ஆம் தேதி தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்கான அரசாணையை வெளியிட்ட திமுக அரசு, 01.01.2026 முதல் ஓய்வூதியத் திட்டம் நடைமுறைக்கு வந்து விட்டதாக மாயத் தோற்றத்தை ஏற்படுத்தியது.

திமுக அரசு வெளியிட்ட அரசாணையில், விதிமுறைகள் வகுக்கப்பட்ட பிறகு தான் தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் நடைமுறைக்கு வரும் என்று குறிப்பிடப்பட்டிருந்ததை திமுக அரசு திட்டமிட்டு மறைத்து அரசு ஊழியர்களை ஏமாற்றியது. அந்த மோசடி இப்போது அம்பலமாகிவிட்டது.

2026ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் கடைசி வேலைநாளான நேற்று 5000க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் பணி ஓய்வு பெற்றனர். அவர்களின் கணிசமானவர்கள் தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற தகுதியானவர்கள் ஆவர். திமுக அரசு கூறியிருந்தவாறு தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் நடைமுறைக்கு வந்திருந்தால், நேற்றுடன் ஓய்வு பெற்ற ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்களில் தகுதியானவர்களுக்கு தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின்படி பயனடைவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்; ஆனால், அத்தகைய ஆணைகள் எதுவும் நேற்று ஓய்வு பெற்ற தமிழக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை.

ஒருவருக்கும் பயனளிக்காத தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை கடந்த 3ஆம் தேதி அறிவித்த போதே, தங்களுக்கு ஆதரவான அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளை அழைத்து, அவர்களை இனிப்பு ஊட்டச் செய்து ஏராளமான நாடகங்களை திமுக அரசு அரங்கேற்றியது. ஒருவேளை தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் நடைமுறைக்கு வந்திருந்தால், அதற்காக மக்களின் வரிப்பணத்தில் ஒரு விழாவையே திமுக அரசு நடத்தியிருக்கும். ஆனால், எதையும் செய்யாமல் அடக்கி வாசிப்பதில் இருந்தே தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்பாட்டுக்கு வரவில்லை என்பது உறுதியாகிறது.

ஓய்வூதியத் திட்டம் என்பது முழுக்க முழுக்க அரசின் நிதியைக் கொண்டே செயல்படுத்தப்பட வேண்டும். ஆனால், தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் என்பது அத்தகையது அல்ல. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஊதியத்தில் 10% பிடித்தம் செய்து அந்தத் தொகையைக் கொண்டு தான் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. புதிய ஓய்வூதியத் திட்டமும் கிட்டத்தட்ட இதே முறையில் தான் செயல்படுத்தப்படுகிறது. ஆனால், புதிய ஓய்வூதியத் திட்டம், மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது திமுக அரசு அறிவித்துள்ள உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின் வாயிலாகக் கிடைக்கும் பயன்கள் மிகவும் குறைவு ஆகும்.

ஆனால், இந்தத் திட்டத்தைக்கூட செயல்படுத்தாமல் அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் திமுக அரசு எவ்வாறு ஏமாற்றுகிறது என்பதிலிருந்தே அதன் மோசடித்தனத்தை அளவிட முடியும். தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்கான விதிகள் வகுக்கப்பட்டால் அத்திட்டம் செயல்பாட்டுக்கு வந்து விடும். ஓய்வூதியத் திட்டத்திற்கான விதிகளை வகுப்பது மிகவும் எளிது. ஆனால், ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசின் சார்பில் ரூ.13,000 கோடி நிதி உடனடியாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

எனினும், அதற்கான நிதி திமுக அரசிடம் இல்லை என்பதால் அந்த நிதியை ஒதுக்கவும் முடியாது; ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்தவும் முடியாது. ஆனாலும், அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் ஏமாற்ற வேண்டும் என்பதற்காகவே இத்தகைய நாடகங்களை திமுக அரசு நடத்துகிறது. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை திட்டமிட்டு ஏமாற்றிய திமுக அரசுக்கு வரும் தேர்தலில் மக்கள் மறக்க முடியாத பாடத்தைப் புகட்டுவார்கள்' எனத் தெரிவித்துள்ளார்.

# ம.பி.யில் சாலையில் நடனமாடியபடி சிக்னல் கொடுத்த தலைமை காவலர் பதவி இறக்கம்



இந்தூர். பிப்.2.-

சாலையில் மைக்கேல் ஜாக்சன் போல் நடனபாடி சிக்னல் கொடுத்த மத்திய பிரதேச போக்குவரத்து தலைமைக் காவலர், காவலராக பதவியிறக்கம் செய்யப்பட்டார்.

மத்தியப் பிரதேசம் இந்தூரில் பணியாற்றும் போக்குவரத்து தலைமைக் காவலர் ரஞ்சித் சிங். இவர் மைக்கேல் ஜாக்சன் போல் 'மூன்வாக்' நடனமாடி சிக்னல் கொடுத்தார். இந்த வீடியோ டி.வி மற்றும் சமூக ஊடகங்களில் வெளியாகி வைரலாக பரவியது. இது குறித்த மத்தியப் பிரதேச காவல் துறை விசாரணை நடத்தி ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

தலைமைக் காவலராக பணியாற்றிய ரஞ்சித் சிங்கை, காவலராக பதவியிறக்கம் செய்து கூடுதல் துணை ஆணையர் ராஜேஸ் தந்தோத்யா உத்தரவிட்டுள்ளார். ரஞ்சித் சிங் மீது ஒரு பெண் அளித்த புகாரில் ஏற்கெனவே ஒரு விசாரணை நடந்து வருகிறது. சமூகம் ஊடகம் மூலம் தொடர்பு கொண்ட பெண் ஒருவருக்கு, தன்னை பார்க்க இந்தூர் வரும்படியும், அதற்கு விமான டிக்கெட் ஏற்பாடு செய்வதாகவும் கூறியுள்ளார்.

இது குறித்து அந்த பெண் அளித்த புகாரின் பேரில் ரஞ்சித் சிங் மீது ஏற்கெனவே துறை ரீதியான விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் சாலையில் நடனமாடி போக்குவரத்து பணியில் ஈடுபட்டதற்காக அவர் பதவியிறக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# அமெரிக்க சிவில் மோசடி வழக்கு: நோட்டீஸ் பெற அதானி சம்மதம்

நியூயார்க். பிப்.2.-

இந்தியாவில் சூரிய மின்சக்தி ஒப்பந்தங்களை பெறுவதற்கு அரசு அதிகாரிகளுக்கு அதானி குழுமம் சுமார் ரூ.2,100 கோடி லஞ்சம் கொடுத்ததாகவும் ஆனால் அதை மறைத்து அமெரிக்க முதலீட்டாளர்களிடம் நிதி திரட்டியதாகவும் தொழிலதிபர் கவுதம் அதானி, அவரது உறவினர் சாகர் அதானி மற்றும் குழும அதிகாரிகள் மீது அமெரிக்க பங்கு பரிவர்த்தனை ஆணையம் (எஸ் இசி) குற்றம் சாட்டியது.

இது தொடர்பாக நியூயார்க்கின் ப்ரூக்ளின் பகுதியில் உள்ள பெடரல் நீதிமன்றத்தில் எஸ்இசி கடந்த 2024 நவம்பரில் 2 சிவில் மோசடி வழக்குகளை தொடர்ந்தது. கவுதம் அதானி, சாகர் அதானி ஆகிய இருவரும் இந்தியாவில் இருப்பதால், அவர்களுக்கு நோட்டீஸ் வழங்க முடியாத நிலையில் இவ்விரண்டு வழக்குகளும் ஒரு வருடத்துக்கும் மேலாக முடங்கியுள்ளன.

இந்நிலையில் புரூக்ளின் பெடரல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மனுவில், எஸ்இசியின் சட்ட ஆவணங்களை (நோட்டீஸை) பெற்றுக்கொள்ள அதானிகள் இருவரும் சம்மதம் தெரிவித்துள்ளதாக அவர்களின் வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

வழக்கு அடுத்த கட்டத்துக்கு செல்ல இந்த மனுவுக்கு நீதிபதி ஒப்புதல் அளிப்பது அவசியமாகும். இந்த மனுவை நீதிபதி ஏற்றுக்கொண்டால் அதானிகள் தங்கள் மீதான வழக்கை தள்ளுபடி செய்யக் கோரும் மனுவையோ அல்லது பதிலோ அளிக்க 90 நாள் அவகாசம் பெற முடியும்.

அதன் பிறகு 60 நாட்களுக்கும் எஸ்இசி தனது எதிர்ப்பை தாக்கல் செய்யலாம். இதற்கு அதானிகள் 45 நாளுக்குள் தங்கள் பதில்களை தாக்கல் செய்யலாம். எஸ்இசியின் குற்றச்சாட்டுகளை அதானி குழுமம் மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000